முருகப்பெருமான் துணை

**மகான் கமலமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.05.2023**, திங்கட்கிழமை

**1.** யோகராஜனே அரங்க மகானே
உயர்வழி மக்களுக்குக் காட்டி
யுகமாற்றம் செய்ய வந்த தேசிகனே
உலகினில் உன் பெருமை கூறி

**2.** கூறியே சோபகிருது விடை திங்கள்
குறைவிலா அட்டமதிகதி சோமவாரம்

**(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 08 ம் நாள், 22.05.2023, திங்கட்கிழமை)**

தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க கமலமுனிவர் யானும்

**3.** யானுரைக்க தரும வழிகளே
உலகை மாற்றும் உயர்வழி
தானாக மக்கள் முன்வந்து
தவராஜனின் அன்னதான சேவையை

**4.** சேவையை ஏற்று உலகமெல்லாம்
செயலாக்கி செய்து வர
அவனியில் தரும சேவை
அளவிலாப் பெருகி வர

**5.** வருகவே தயவு நிரம்பிய
வள்ளல்களாக மக்களிடை
தரும சிந்தை பெருகி நின்று
தரணியில் நற்பலன்கள் ஓங்கும்

**6.** ஓங்கும் இயற்கையும் மகிழ்ந்து
ஒருபோதும் பாதகமில்லா
எங்கும் மழைவளம் குன்றா
எல்லா வளமும் பெருகிநிற்கும்

**7.** நிற்கவே தரும சிந்தை வளர
நிலவுலகை விட்டு கயமைவஞ்சம்
ஏற்பிலா கெடுதிகள் அனைத்தும்
இருக்கும் இடம் தெரியா அகலநேரும்

8. நேருமை கொண்ட மக்களே
நீதியுடன் வாழும் காலமாக
வறுமை விரட்டி தேசம்
வளம் காக்கும் வண்ணம்

9. வண்ணமுடன் உழைப்பு பெருகி
வையகம் தன்னில் நல்ல தலைமை
அண்ணல் அரங்கன் வேண்டலில்
ஆற்றல்பட ஞானத்தலைமை ஆக

10. ஆகவே அமைதல் கண்டு
அகிலம் ஞானத் தலைவன்
மகான் சுப்பிரமண்யப் பெருமான்
மாதவ ஞான வழிகளை பின்பற்றி

11. பின்பற்றி ஞானவான்களாக
பேருலகம் நிரம்பி இனிதே
இன்பமான ஞான ஆட்சி மலரும்
இயம்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—